விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 22 ஷஃபா 13 இதழ் 83
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-5-1985

## மனித உரிமை மீறல்பற்றி ஆராய சர்வதேச அவசர கமிட்டி அமைக்கப்பட்டது

### முதலில் இலங்கை குறித்து ஆராயும்

(லண்டன்)

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்ட விதிமுறைகள் அமுல் தொடர்பான விவகாரங்களில் நீண்டகால அனுபவம்பெற்ற ஐவர், சர்வதேச அவசர கமிட்டி ஒன்றை அமைத்துள்ளனர்.

எந்தெந்த நாடுகளில் மனித உரிமை மீறப்படுகிறது என்பதை ஆதாரபூர்வமாக உலகின் கவனத்திற்குக் கொண்டு வருவதும், அம்மக்களுக்கு நீதி கிடைக்க வழிகாணுவதுமே இக்கமிட்டியின் நோக்கமாகும்.

முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் திரு. டேம் ஜூடித் ஹாரிட், இந்தோனேஷியாவின் பிரபல மனித உரிமைகள் வழக்கறிஞர் திரு. புயோங் நஸூரியன், அரபு நாடுகள் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் அபே ரஹ்மான் யூசுவ், சமாதான நோபல் பரிசு பெற்ற பிஷப் டெஷ்மன் ரூற்று, ஐ நா. விலுள்ள அமெரிக்க பிரதிநிதி திரு. அன்ட்றூ யங்

(6-ம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு மாருக 'தொண்டா' செயல்படுகிருராம்!

## உரிய நடவடிக்கை எடுக்க ஜனுதிபதியை கோருகிருர்கள்

[கொழும்பு]

கிராமியத் தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அரசுக்கு எதிராகவும் நாட்டு மக்களுக்கு எதிராகவும் கருத்துக்கள் வெளியிட்டுவருகிருர் என்றும், அவருக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அரச வழக்கறிஞர் திரு. சிறிபெரேராவைத் தலைவராகக் கொண்ட இலங்கை பௌத்த சபை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கேட்டுள்ளது.

''இந்த நாடு எல்லா இன மக்களுக்கும் சொந்தமானது. எனவே வடக்கில் 2 லட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்த வேண்டும் என்று ஜனுதிபதியும், தேசிய பாதுகாப்பு அமைச்சரும் கொள்கைப் பிரகடனம் செய்திருக்கும்போது கிராமிய கைத்தொழில் அமைச்சர் வடக்கு கிழக்கில் இரண்டு லட்சமல்ல இருநூறு சிங்களவரைக்கூடக் குடியமர்த்தலாகாது எனப் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டுள்ளார். முஸ்லிம் இயக்கம் ஒன்றின் முன் உரை நிகழ்த்தியபோது சிறுபான்மை மக்கள் தம் பாதுகாப்பை உத்தேசித்து இயக்க ரீதியில் ஒன்றுபட வேண்டும் எனக் கூறியதன்மூலம் முஸ்லிம்கள் மத்தியில் வகுப்புவாதத்தைத் தூண்ட முயன்றிருக்கிருர். 'மலைநாடு' ஒன்றை உருவாக்குவதில் என்ன தவறு

(6ம் பக்கம் பார்க்க)

## ★ 'ஜம்மு–கஷ்மீர்' விவகாரம்

## ஜே. ஆர்- கருத்துக்குறித்து இந்திய அரசு கவலை!

[புதுடில்லி]

இலங்கை ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்தன 'ஜம்மு-காஷ்மீர்' மாநில மக்களின் சுயநிர்ணய உரிமையைத் தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்திருப்பது குறித்து இந்திய அரசு மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனுப் குர்ஷித் ஆலம் கான் நேற்று இந்திய ராஜ்ய சபையில் வெளியிட்டார்.

ஜனுப் ஆலம்கான் மேலும் கூறியிருப்பதாவது:- ''ஜனுதிபதி ஜயவர்த்தன அண்மையில் பாகிஸ்தான் விஜயம் செய்திருந்தார். அங்குஅவர் கருத்து வெளியிட்டபோதே 'ஜம்மு-காஷ்மீர்' மக்களின் சுயநிர்ணய உரிமையைத் தாம் ஆதரிப்பதாகக் கூறினுர்.

இக்கருத்து இந்திய அரசின் வருத்தத்துக்குரிய தொன்ருக உள்ளது. திரு. ஜயவர்த்தன அவ்வாறு பொறுப்பற்றவிதத்தில் பேசியிருக்கக்கூடாது'' என்று ஜனுப் ஆலம்கான் தெரிவித்தார்

## இன்று சந்திரகிரகணம்

(கொழும்பு)

இன்று சந்திரகிரகணம் நிகழவிருக்கின்றது!

நள்ளிரவு 12 மணி 1நிமிடம் முதல் அதிகாலை 3 மணி 20 நிமிடம் வரை இச்சந்திரகிரகணம் நீடிக்கும்

சுமார் ஒரு மணி நேரத்துக்கு முழு அளவிலான பூரண சந்திர கிரகணம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## பாடசாலைகளில் "சீஸன் டிக்கட்"?

(யாழ்ப்பாணம்)

''யாழ் பஸ் நிலையத்தில் அடிக்கடி நிகழும் அசம்பாவிதங்கள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு இம்மாதம் முதல் யாழ் பஸ்நிலையத்தில் பருவகால(சீஸன்) சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது ?என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை யாழ் சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

## வர்த்தகர் கடத்தல் ரூ. 16 லட்சம் பணயம்?

(யாழ்ப்பாணம்)

வர்த்தகரான கே. எஸ். பொன்னம்பலத்தை அழைத்துச் சென்றவர்கள் 16 லட்சம் ரூபா கோரி பணயம் வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''[இன்று] சனிக்கிழமை நண்பகல் ஒரு மணிக்குள் 16

(6-ம்பக்கம் பார்க்க)

## ★ பஸ்ஸிலிருந்து 'பாட்டரி' அபகரிப்பு: 787 பாதையில் இன்று பஸ் ஓடாது!

[யாழ்ப்பாணம்]

பஸ்களிலிருந்த 'பாட்டரி'கள் நேற்று அபகரிக்கப்பட்டதால் 787 இலக்கப் பாதையில் வ. பி. போ. சபை பஸ்கள் இன்று சேவையில் ஈடுபடமாட்டாது எனத் தெரியவருகிறது.

6ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைத் தமிழ்ப்பகுதிகளில் இராணுவத்துக்குப் பதிலாக பொலிஸ்படைகளை நிறுத்துக"

### ராஜ்ய சபையில் ஆலம்கான் யோசனை

(புதுடில்லி)

''இலங்கைத் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தை வாபஸ்பெற்றுவிட்டு பொலிஸ் படைகளைச் சேவையில் ஈடுபடுத்தவும்.'' என்று இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் ஜனுப் குர்ஷித் ஆலம் கான் தெரிவித்தார்

இந்திய ராஜ்ய சபா கூட்டம் நேற்று இடம்பெற்றது. அங்கு பேசும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனுப்ஆலம்கான்தொடர்ந்து பேசியதாவது:- ''இலங்கை இனப்பிரச்னைக்கு அங்குள்ள சகல தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுமுகமான

[6ம் பக்கம் பார்க்க]

## பஸ்மீது கல்வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பஸ்மீது நேற்றுமுன்தினம் கற்கள் வீசப்பட்டதால், சில பிரயாணிகள்

[6ம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த நிலையில் சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் முனியப்பர் கோவிலுக்கருகாமையில் உருக்குலைந்த நிலையில்சடலம் ஒன்று நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பட்ட சடலம் பின்னர் அரச அதிகாரிகளினுல் மயானம் ஒன்றில் புதைக்கப்பட்டதாம். (மா)

## யாழ் – திருமலை மேலதிக பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு இன்று

(6-ம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

மே முதலாம் திகதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் களஞ்சியத்தில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியால் ஏறக்குறைய 10 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளும் வேறு பொருட்களும் களவாடப்பட்டன. எமது வழமையான விநியோகஸ்தர்களும் மற்றும் சில்லறை வியாபாரிகளும் களவாடப்பட்ட சிகரட் பெட்டிகளையும், பக்கட்டுகளையும் ஸ்தாபனத்தினதும் ஊழியர்களினதும் நன்மை கருதி வாங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேம். களவாடப்பட்ட சிகரட்டுகளை விற்பனை செய்பவர்கள் தண்டனைக்குள்ளாகவும் கூடும்.

இந்தக் களவினுல் ஏற்பட்ட நட்டம் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் என்பதால் இந்தக் களவில் சம்பந்தப்பட்டவர்களை சென்ற முறை கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை திருப்பி ஒப்படைப்பதற்கு பின்னணியில் நின்ற நலன் விரும்பிகள் இந்தத் தடவையும் உதவிசெய்து ஊழியர்களுக்கு வாழ்வளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேம்.

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்

3-5-85 (3130)

# அசி ஐளம்பரம்

## விற்பனைக்கு

அதிகமான வெப்பத்திலிருந்து தாங்க முடியவில்லையா? இன்றே அதிசிறந்த M G M தயாரிப்பாளர் நெல்லிகிறஸ் அருந்தி உங்கள் கவலையை மறந்துவிடுங்கள். முழுபோத்தல் விலை ரூபா 27-50 M G M, and Stores. 777, காங்கேசன்துறை வீதி and 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 2820

நாஷனல் எயர் கொண்டிசனர் (Air Conditioner மொடல் CW—182 AS 235T —MC 17,000 BTU/H. நல்ல நிலையில் உள்ளது. ஒருவருடகாலம் பாவிக்கப்பட்டது. விளம்பர இல; 3088, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 3088

சில்லாலையில் பிரபல வைத்தியர்கள் வசிக்கும் சுற்றுடலில் 3½ பரப்பு காணி, கிணற்றுப்பங்குடன் விற்பனைக்கு உண்டு. விளம்பர இல 3025 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3025

நல்ல நிலையில் உள்ள National Washing Machine, 18'' துவிச்சக்கரவண்டி, பெண்கள் துவிச்சக்கரவண்டி முதலியவை - 68, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 3115

பாவித்த தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 86, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3120

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு சமீபமாக நல்ல தண்ணீர் கிணற்றுடன் 6½ பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. பொ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி. 3116

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு வடக்குப் பக்கமாக தண்ணீர் வசதியுடன் 10 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்:- சு. முத்துலிங்கம், 56, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3102

நல்ல நிலையிலுள்ள E L. F 150 பிரயாணிகள் மினிவான் விலைமலிவு விற்பனைக்குண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: அ அன்ரன், நித்திய கல்யாணி ஜுவல்லறி, 162, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 3123

நாஷனல் பெடஸ்ரல் மின்விசிறி [Fan] விற்பனைக்கு உண்டு மூன்று வர்ண லேட்டும் டைமரும் கொண்டது. ட்றேட் சென்றர், Home Finance Ltd, 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 2861

## உடனடியாகத் தேவை

கொக்குவிலில் உள்ள சிறுவர் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியை [மொன்ரோசொரி] தேவை. விருப்பமுடையோர் தராதரப் பத்திரங்களுடன் 6-5-85 காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை சமுகமளிக்கவும். ஆங்கில ஆற்றல் விரும்பத் தக்கது. 73 நந்தாவில் அம்மன் வீதி, கணக்கர்வளவு, கொக்குவில் கிழக்கு. 3103

## தேவை

நித்திய பூசகரும் உதவிக்காக பல வேலைகள் செய்யக்கூடிய பிராமணப் பையன் அல்லது பண்டாரமாக இருப்பவராயினும் விரும்பத்தக்கது. விபரங்கட்கு தொடர்பு கொள்க: தர்மகர்த்தா, துர்க்கை அம்மன் தேவஸ்தானம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. 3114

## காணவில்லை

தாவடி - சுதுமலை வீதியில் நேற்றுக்காலை, கறுப்புநிற பேர்ஸ், வெளிநாட்டு லைசென்ஸுடன் காணாமற்போய் விட்டது. கண்டெடுத்தோருக்கு உரிய சன்மானம் வழங்கப்படும். விமல்ராஜ், றெயில் றோட், கொக்குவில் கிழக்கு. 3127

## வாடகைக்கு

மல்லாகம், K. K. S. வீதி சந்திக்கு அருகில், நவீன தளபாட வசதிகளுடன் கடை குத்தகைக்கு உண்டு. விபரங்களுக்கு நாதன் ஸ்டோர்ஸ், சந்தி, மல்லாகத்தில் விசாரிக்கவும். 3024

## தவறிவிட்டது

தம்பையா சிவபரஞ்சோதி மண்டைதீவு என்பவரின் தேசிய அடையாள அட்டை டயரியுடன் கடந்த 1-ம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். த. சிவபரஞ்சோதி, 0-ம் வட்டாரம், மண்டைதீவு. 3124

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## கோப்பாய் லயன்ஸ் கழகம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
### 5—5—85

மேற்படி சீட்டிழுப்பு
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில்
5 5-85 காலை 10 மணியளவில் இடம்பெறும்.

கோப்பாய்.
2-5-85.

J. S. S. ஆனந்தம்,
தலைவர்.

(3104)

## கடல் கோட்டை

( ஈழநாடு வெளியீடு )
இப்பொழுது எல்லா 'ஈழநாடு' ஏஜண்டுகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்
'ஈழநாடு' வாரமலரில் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் அமோக செல்வாக்கைப் பெற்ற
செங்கை ஆழியானின்
தனித்துவப் படைப்பு
"கடல் கோட்டை"
விற்பனையாகிறது
உங்கள் பிரதிகளுக்கு உங்கள் அண்மையிலுள்ள 'ஈழநாடு' விற்பனையாளரை நாடுங்கள்.
(3125)

## 1-ம் வருட நினைவஞ்சலி
## அமரர் கதிரவேலு நன்னிததம்பி
(ஆனைப்பாறிய பிஸ்க்கால் உத்தியோகஸ்தர்)



மலர்வு:
14-4-1914
உதிர்வு:
15-4-1984
திதி:
4-5-1985

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு ஒருபோதும் மறையாது.

மருதடிவீதி,
யாழ்ப்பாணம்.
2749

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற கந்தரோடை சுன்னாகம் வெற்றிவேற்பிள்ளை செல்வத்துரை என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயமாக.

-மரணமெய்தியவர்:
செல்வத்துரை கதிர்காமஜோதி கந்தரோடை சுன்னாகம்.

-மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்
இல. ரி/235

எதிராக

1. செல்வத்துரை சண்முகதாஸ் கந்தரோடை சுன்னாகம்
2. செல்வத்துரை செந்தில்வேல் வட்டுக்கோட்டை மேற்கு
3. செல்வத்துரை சிவசக்திவேல், கந்தரோடை சுன்னாகம்

-எதிர்மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந்திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுமாக தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு மாசி மாதம் 18ந் திகதி அந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்ற ஆணைப்படி
சு. வேலாயுதம
பதில் பதிவாளர்.

3015

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா தம்பித்துரையின் மரணசாதனமற்ற சொத்துக்களின் விடயம்.

— மரணம் எய்தியவர்

தம்பித்துரை கைம் பெண் சந்திராதேவி,
மூர்த்திவளவு,
தெல்லிப்பளை. — மனுதார்

எதிர்

இல; தத்துவம் / 224

(1) தம்பித்துரை தநூயா,
(2) தம்பித்துரை மகள் தர்சியா.
(3) தம்பித்துரை மகள் கனிஷ்டா.
(4) பொன்னையா சந்திரசேகரம்,
மூர்த்திவளவு,
தெல்லிப்பளை,

— எதிர்மனுதார்கள்

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவவழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு:
V. S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி

3077

உ

## திருமண அழைப்பு

மணமகன்
கனிஷ்ட புதல்வன்
**கருணேந்திரன்**
(மாநகரசபை,
யாழ்ப்பாணம்)

மணமகள்
கனிஷ்ட புதல்வி
**சாந்தா**

காலம்: 06—05—1985 திங்கட்கிழமை
காலை 11-00 மணி முதல் 1-00 மணிவரை
இடம்: தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபம்

திரு. திருமதி
தம்பிஐயா,
அரசடி வீதி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

திரு திருமதி
க கணபதிப்பிள்ளை,
C/o T P பத்மநாதன்,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

(3128)

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, ஒல்லாந்து செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜேர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்துகொடுக்கப்படும்.

செவ்வாய் முதல்
வெள்ளி வரை
PRASAD REST,
11 - Upatissa Road,
BAMBALAPITIYA. PHONE: 587855

சனி, ஞாயிறு, திங்கள்
வ. நல்லையா,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[3075]

**மணிவாக்கு**

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும்
சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை

— குறள்

# நமதுநோக்கு

## பௌத்தம் வகுத்த இரு மனித அடிப்படை உரிமைகள்

கொல்லாமையையும் கருணையையும் போதித்த வடபாரதத்தின் வள்ளற் பெருமானின் புனிதவெசாக் தினம் வருடாவருடம் இந்த நாட்டில் குதூகலமாகக் கொண்டாடப்படுகின்றது

இவ்வருட கொண்டாட்டத்தை நாம் உள்ளவாறு உரைக்கில் அது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும்

பாரதத்துக்கு எல்லை குறிப்பிடும்போது காசி தொடக்கம் கன்யாகுமரி வரைக்கும் என்று சொல்வது வழக்கம்; அது ஒருவித இந்து மரபு. பாரத கலாசாரம் என்றால் இந்து கலாசாரம் என்று மட்டுப்படுத்துவது தவறென நேரு தம்முடைய நூலில் ஆராய்ந்து சொல்கிறார்.

காசியிலிருந்து ஏழுமைல் தூரத்திலுள்ள சாரநாத் புத்தபெருமான் இறுதியாக பரிநிர்வாணம் பெற்ற புனிததலம்.

காசியில் நிகழும் அமளிதுமளிக்கு நேர்மாறாக சிறு தூரத்தில் ஓர் அமைதியும் அழகும் அருளும் ததும்பும் இடம் அமைந்திருப்பதை காசி யாத்திரீகர்கள் பலர் அறியார்.

உயிர்க்கொலை கூடாது. கருணையே மனிதப்பிறவியின் உயிர்மூச்சு. இரக்கமே வாழ்வின் பொருள் என்ற மகத்தான கோட்பாட்டுக்காக, அரசபோகம் அனைத்தையும் துறந்து வாழ்ந்தவர் புத்தபெருமான்.

அவர் இறுதியாக வாழ்ந்த அந்த இடத்தை சுற்றி மூன்று மைல் சுற்றளவுக்குள் அவருடைய இலட்சியத்தை பரிபூரணமாக அந்த மாநிலஅரசு நிறைவேற்றி வைத்திருப்பது பாரத கலாசாரத்தின் தனித்துவப் பண்பு.

அங்கு எந்தவிதமான ஜீவஹிம்சையும் செய்யக் கூடாது; எந்தப் பறவையையும் சுடக்கூடாது. மாமிசம் அறுக்கவோ சமைக்கவோ உண்ணவோ கூடாது என்பது மாநில அரசு செய்திருக்கும் கண்டிப்பான சட்டம்.

ஆனால் இன்று சாரநாத் பௌத்த மக்களின் யாத்திரைத் தலம்; அப்பகுதி புதைபொருள் ஆராய்ச்சியாளரின் வேட்டை நிலம். பௌத்தம் பிறந்தநாட்டை விட்டு வெளியேறி புகுந்த நாடுகளில் சிறந்திருக்கிறது; அந்த நாடுகளில் ஒன்றே எங்கள் இலங்கை.

கடல்கடந்த பௌத்தம் தூரகிழக்கில் உள்ள ஜப்பானில் சிறப்புப்பெற்றிருக்கிறது. சாரநாத்தில் உள்ள சிறந்த ஆலயத்தை அமைத்தவர்கள் ஜப்பானியர்.

இலங்கையில் பௌத்தமும் புத்த கலாசாரமும் மேலோங்கி வளர இன்றைய அரசு ஆவனசெய்கின்றது. சங்கத்தினர் உயிர்த்துடிப்புடன் சேவையாற்றுகின்றனர்,

வரலாற்று ரீதியில் புத்த பெருமான் இலங்கைக்கு வந்ததும், எத்தனைதரம் வந்ததும், அவருடைய போதனைகள் செயல்கள் எவையென்பதெல்லாம் வரலாற்று நிபுணரின் மாயா சாலத்தில் மறைந்துகிடக்கின்றன.

எவ்வித சந்தேகத்துக்கும் இடமளிக்காத பௌத்தம், பௌத்த கலாசாரம், அதனைப் பறைசாற்றும் மிக உன்னதமான கோவில்கள், ஆட்சிசெய்த மன்னரின் சமயப்பண்பு, சங்கத்தின் சிறப்பு, பௌத்தமத வாழ்வில் சிறந்த சான்றோர் இந்த நாட்டில் நிலைத்திருப்பது கண்கூடு.

இவையனைத்தும் இந்த நாட்டைச் சிறப்பிக்கும் வகையில் இருந்தபோதும், இன்று மனிதன் தன் உயிரைப் பாதுகாக்கத் திண்டாடும்நிலை சாதாரணமானது. மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படும் நிலை ஆட்சிக்கும் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆட்சிமுறை எதுவாயிருந்தாலும் எந்தப் பிரஜையோ பிராணியோ உயிர்வாழும் உரிமை பேணப்படவேண்டுமென்பது புத்தபெருமானின் முதற்போதனை.

ஒவ்வொரு மனிதனும் தன் சுபாவத்துக்கேற்ப, தன் கர்மாவை ஒழிக்க தன்னாலியன்ற அளவுக்கு உயரபௌத்த சமுதாயம் இடமளிக்கவேண்டும். இதுவே ஆட்சியின் பெரும் பொறுப்பு.

இதனைத் தொடர்ந்து நாட்டின் அரசியல் சமுதாய கட்டுக்கோப்பு மனிதன் வாழ்வுக்கு ஏதுவான சமூகத்துக்கு தடையற்ற வழியில், சொத்தைப் பேணும் உரித்து மனிதனின் இரண்டாவது உரிமையென வகுத்தார்.

உயிர் உரிமை, சொத்துரிமை என்ற இரு தூண்களில் கட்டப்பட்ட மாளிகையே உலகம் இன்று பிரசித்தம்செய்யும் ஐ. நாவின் மனித அடிப்படை உரிமைகள்.

வரலாற்றின் இன்றைய விசித்திரம் இன்று மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் ஆபிரிக்க நாடுகளுடன் போட்டிபோடும் ஆசிய நாடு இலங்கை எனலாம்.

ஆசியஜோதி இன்று அசுபகிரகணத்தில் அகப்பட்டிருப்பதால் நாடு இருளில் மூழ்கியிருக்கின்றது

உயிர்வாழும் உரிமை ஒரே சமூகத்தவருக்கென்பதால் தமிழ்மக்கள் அந்த உரிமையை இழந்து அஞ்சுவதால் புத்தர் அவதரித்த பாரதத்துக்கு அவருடைய போதனையையே பரப்பிய தமிழ் முனிவரை உலகுக்கு அளித்த தமிழ்நாட்டில் புகலிடம்பெற்றிருக்கின்றனர்.

வடபாரதத்திற்குச் சிறப்பளித்த புத்தபெருமானுக்கும், தென்னாடு தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கும் அடிப்படையில் அதிக ஒற்றுமை உண்டு.

அடிப்படைசமய,கலாசார உண்மைகளில் அதிக கவனம் செலுத்தும் அதிகார தலைவர்கள் இன்றில்லை. எதனையும் சமயம் உட்பட பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றவும், அதில் அசையாது குந்தியிருக்கவுமே பயன்படுத்தும் பயிற்சி இன்று ஆசிய நாடுகளில் அளவுகடந்திருக்கின்றது

மனித உரிமைகளைப் பேணி இன்றையகொடுமைகளுக்கும் அநீதிகளுக்கும் முடிவுகாணும்ஆற்றல் ஆட்சியில் குன்றிவருகிறது சங்கமும்பௌத்த மக்களும் நிலைமையை மாற்றியமைக்க மனமாற்றம் அவசியம் என்பது இன்றைய வெசாக் சிந்தனை.

## "இலங்கைத்தமிழர் படும் அவதிகளுக்கு இனப்பிரச்னை மட்டும் காரணமல்ல"

### துக்ளக்கில் 'சோ' கருத்து

சென்னை, மே. 4

''இலங்கைத் தமிழர்கள் படும் அவதிக்கும், சமீபகாலம் கண்டிராத துன்பங்களுக்கும் காரணம் இனப்பிரச்னை மட்டுமல்ல. அரசியல், பொருளாதாரம், மதநம்பிக்கைகள், சரித்திர உணர்வுகள் ஆகியவையும் இதில் பின்னிப் பிணைந்திருக்கின்றன''.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் 'துக்ளக்' பத்திரிகையில் ''இலங்கைப்பிரச்னை'' என்ற தலைப்பில் அதன் ஆசிரியர் 'சோ' எழுதிவரும் கட்டுரையில் தெரிவித்துள்ளார்

அக்கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''பிரிட்டிஷார் தங்கள் காலனிகளில் சிலவற்றை விட்டு வெளியேறும் போது சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை ஓரளவாவது தீர்த்து வைக்கச் சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் போனார்கள். இந்தியாவை விட்டு வெளியேறும் போதுகூட சிறுபான்மை மக்களின் கோரிக்கையான பாகிஸ்தான் ஏற்பாட்டைச் செய்துவிட்டுப் போனார்கள். இலங்கையில் சிறுபான்மை மக்களான தமிழர்களின் பிரச்னைக்கு எந்த ஒரு தீர்வும் காண முயற்சி செய்யாமலேயே பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறினார்கள், சிங்களவர்கள் சரியான தீர்ப்பு வழங்குவார்கள் என்று நம்புகிறவர்களைப் போலதீர்வை இலங்கையிடமே விட்டுவிட்டு பிரிட்டிஷார் போய்ச் சேர்ந்தார்கள்.

இதுவரை பிரச்னை தீர்க்கப் படவில்லை. நியாயம் வழங்கப் படவில்லை.

இலங்கையில் சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகளைப் பெற இலங்கைத் தமிழர்களுக்குத் தகுதி இருக்கிறது. தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கை எடுத்த எடுப்பிலேயே தீவிரமாக எழுப்பப் படவில்லை

அதே சமயத்தில் பிரச்னைகளை ஓரளவாவது தீர்த்து வைக்கும் முயற்சிகளில் இலங்கையில் அவ்வப்போது வெவ்வேறு அரசுகள் சில முயற்சிகளைச் செய்து இருக்கின்றன. ஆனால் அந்த முயற்சிகளை ஒரு ஆளும் கட்சி மேற்கொள்ளும் போது. சிங்கள மக்களிடையே அதற்கு எதிர்ப்புகளைக் கிளப்பிவிட வேறுசில கட்சிகள் தயாராக இருக்கின்றன. அந்த எதிர்ப்புக்கு அஞ்சி, அம்மாதிரி முயற்சிகள் அவ்வப்போது கைவிடப்பட்டிருக்கின்றன.

அதாவது தங்களுடைய செல்வாக்குக் குறைந்து விடுமோ என்ற பயம் இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளை வாட்டுவது தமிழர் பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு ஒரு காரணம்.

இலங்கைப் பிரச்னையை அணுகும்போது, அங்குள்ள இந்தியத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய அணுகுமுறை வித்தியாசமானவை என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது

இதைத்தவிர வேறுசில விஷயங்களையும் பார்க்கவேண்டும். இந்தியத் தமிழர்களின் பிரதிநிதியாக, தொண்டமான் இன்றும்கூட இலங்கை அரசில் அமைச்சராகப் பதவி வகிக்கிறார். தனிநாடு கேட்பதை வெளிப்படையாகவே அவர் எதிர்க்கிறார்,

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அனேகமாக தமிழகத்திலேயே இருக்கிறார்கள். ''விடுதலைப்புலிகள்'' என்பது ஓர் இயக்கமல்ல. அதில் பத்துக்கு மேற்பட்ட அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொன்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண குடாநாட்டின் நீர்ப்பாசன வசதிகள்

### டாக்டர் ஆர். டபிள்யூ. ஸி. தம்பையா

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாண மக்கள் உப உணவு விவசாயிகளென்பதும், நீர்ப்பாசனமே. அவர்களது வாழ்க்கையின் இரத்தோட்ட மிக உள்ளதென்பதும் ஒரு நீண்டகால உண்மையாகும்

கிளிநொச்சிப்பகுதி யாழ்ப்பாணத்திலிருந்தும் வேருக்கப்பட்டு புதிய நிர்வாகமாக்கப் பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தின் விவசாய நிலங்களில் சுமார் இரண்டு லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர்கள் இந்த மாவட்டத்திற்குள் அடங்கின.

[3]

யாழ்ப்பாண மாவட்டத்தின் பயிர்ச்செய்கை மழைவீழ்ச்சியையே பெருமளவில் எதிர்பார்த்ததொன்றாக இருக்கின்றது. இதனால் பெருமளவு நிலப்பரப்பு 'வானம் பார்த்த பூமி'களாகவே உள்ளன.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கூன் 1983—84 ஆண்டுகளில் மிதமிஞ்சிய மழைவீழ்ச்சியால் பல பயிரினங்களின் உற்பத்தி மோசமாக்கப்பட்டது என்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் பயிரினங்களும் அவற்றுக்கு ஏற்பட்ட நஷ்டங்களின் தொகையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விபரம் வருமாறு**

| பயிர் | நஷ்டம் |
|---|---|
| நெல் | ரூ. 67,000 |
| சின்ன வெங்காயம் | ரூ. 106,000 |
| மிளகாய் | ரூ. 7.,000 |
| உருளைக் கிழங்கு | ரூ. 121,000 |
| புகையிலை | ரூ. 22,000 |
| கன்றுகளில்! | |

இந்த விபரங்கள், யாழ். விவசாயிகள் மழைநீரைக் கூடுதலாக நம்பியிருப்பதும், மழைவீழ்ச்சி பொய்க்கும் போதும், மிதமிஞ்சும்போதும் காலதாமதமாகும்போதும், விரைந்து வரும்போதும் ஏற்படும் அழிவுகளையே விளக்குகின்றன

இந்நிலையிலேயே யாழ். விவசாயிகளுக்குக் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நீர்விநியோக முறை அத்தியாவசியம் தேவைப்படுகிறது.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு அண்மையில் இரு வேறு நிர்வாக மாவட்டங்களாக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவற்றின் விவசாயத் திட்டங்களை நன்கு திட்டமிட வேண்டும்.

கிளிநொச்சி தனிமாவட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து 2 லட்சத்து 82 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி அம்மாவட்டத்துடன் சேர்ந்துவிட்டதை மேலே குறிப்பிட்டிருந்தோம். இந்த மாவட்டத்திலேயே ஆனையிறவு நீர்த்தேக்கமும் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஆனையிறவு கடல்நீரேரி ஒரு நன்னீர்த் தேக்கமாக்கப் படும்போது யாழ். மாவட்டம், மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாய நிலங்கள் இதன்மூலம் பெருமளவு நீரைப் பெறும் இதனால் ஏற்கனவே நம்பியிருந்த சிறு குளங்கள். தேக்கங்களில் நீர் வற்றிப்போகும் போதும் மக்கள் இந்த ஆனையிறவுத் தேக்கத்திலிருந்து போதுமான நீரைப் பெற முடியும்.

இக்கட்டத்திலேயே 1919ம் ஆண்டில் கௌரவ கே. பாலசிங்கம் அவர்கள் சட்டசபையில் கூறியிருப்பது சகலரதும் சிந்தையைக் கவருகின்றது. 'தம்புள்ளவிலிருந்து ஆனையிறவுவரை' மகாவலிநதிநீரை பயன்படுத்துவதில் எத்தகைய நிதி, அல்லது பொறியியல் விரயமும் ஏற்படப்போவதில்லை' என்றார்.

(4ம் பக்கம் பார்க்க)

★ இன்று மானிப்பாய் வேலக்கை முருகன் தேர்

**கருணை பொழி கந்தன்**

குஞ்சரக் கன்றையன்று கூவியழைத் தவ்வள்ளி
அஞ்சுகச் சத்தி அணையநின்று-தஞ்சமென
வந்தவடி யார்க்கருள் மாதேவனே வேலக்கை
தந்தகுகன் தாள்கள் சரண்

பவக்கடலில் வீழ்ந்த படுபாவி சூரன்
தவக்கோலம் கொள்ளும் தகைமை-
சிவக்கொழுந்தாய்
கார்த்திகைப் பெண்கள் கரமெழுந்த வேலக்கை
மூர்த்தியே ஆறு முகன்

நம. சிவப்பிரகாசம்

### தமிழ்மக்கள் பிரச்னையை

# சாதாரண சிங்கள மக்கள் அறியாதவரை பிரச்னைதீராது

## தொழிற்சங்க கூட்டுக்குழு மேதினத்தில்உரை

(யாழ்ப்பாணம்)

'சிங்கள தொழிலாளி வர்க்கமும் சாதாரண சிங்கள மக்களும் தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெளிவாக அறிந்து அப்பிரச்சினைகளின் தீர்விற்க்காக குரல் கொடுத்து போராட்டம் நடத்தி செயல் படாதவரை தமிழ் மக்கள் பிரச்சனைகள் தீரப்போவதில்லை. இதற்கான முயற்சிகளை வட-பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு மேற்கொண்டு வருகிறது. அரசியல் வேறுபாடுகளை மறந்து அரசின் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராக செயல்பட்டு வருகின்றோம். கூட்டுக்குழுவை பலப்படுத்துவது ஒவ்வொரு தொழிலாளியினதும் தலையாய கடமையாகும். இதனை இம்முறை மேதினப் பிரகடனமாக ஏற்று செயல்படுவோம்.'

யாழ்ப்பாண ்தில் நடைபெற்ற மேதினக் கருத்தரங்கில் பேசிய வடபிரதேச கூட்டுக்குழு அழைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் கூறினர்.

திரு. வி. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் இ தொழிற் சங்க சம்மேளனததின் பிரதிநிதி திரு எம் ஏ. சி. இக்பால் பேசுகையில், 'கடந்த காலத்தில் நடைபெற்ற தொழிற் சங்க போராட்டங்களை யூ.என்.பி. அரசு வன்முறையால் அடக்கியுள்ளது. அதுபோலவே இங்கிலாந்தில் ஓராண்டிற்கு மேலாக நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர் போராட்டத்தை தட்சர் அரசாங்கம் கடுமையான முறையில் நசுக்கியுள்ளது. தொழிலாளர் போராட்டங்களின் இந்தத் ?தால்விகளுக்குக் காரணம் அவை தொழிற் சங்க வட்டாரத்துக்குள் சாத்வீக ரீதியில் நடைபெற்றதேயாகும், என்றார்.

திருவாளர்கள் ஏ. கே. அண்ணாமலை, பொன் குமாரசாமி, ஏ. யோசப், எஸ். சுந்தரலிங்கம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். (மா)

### சட்ட விரோதமான முறையில்:

## மின்சாரம் எடுப்பவர்கள் பட்டியலை அனுப்பவும்

(பண்டத்தரிப்பு)

சட்ட விரோதமான முறையில் மின்சாரம் எடுத்திருப்பவர்களின் பட்டியல் ஒன்றை தயாரித்து மூன்று பிரதிகளில் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் யாழ். மாவட்டச் செயலாளர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்து வருவதாக தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து யாழ். மாவட்ட செயலாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சட்ட விரோத மின்பாவனையால் மின் விநியோகத்தில் ஏற்படும் சிரமங்களைப் பற்றியும், பொதுமக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களைப் பற்றியும், சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கிப் பிரசாரம் செய்யப்படவேண்டும் என்றும் மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை அஞ்சலியும் கருத்தரங்கும்

[யாழ்ப்பாணம்]

சைவ அறிஞரான அமரர் முதலியார் செ. சின்னத்தம்பி நினைவஞ்சலிக் கூட்டமும், கருத்தரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன. அன்னாரது நிழற்படமும் இங்கு திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

அகில உலக அருள்நெறி மன்றத்தின் இலங்கைக்கிளை இவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## கம்யூனிஸ்ட் தலைவருக்கு பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சிரேஷ்ட கம்யூனிஸ்ட் கட்சிப்பிரமுகர்களில் ஒருவரான திரு. எ. வைத்தியலிங்கம் அவர்களின் 70 வயதுப்பூர்த்தியை முன்னிட்டு பாராட்டு வைபவமொன்று கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இவ்வைபவம் எதிர்வரும் 6-ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு 'சுகிஸ்வரமண்டபம் 91'ல் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு இந்த வைபவத்தை ஒழுங்குசெய்துள்ளது. இக்கட்சியின் செயலாளர் திரு. கே பி சில்வா இந்த வைபவத்திற்குத் தலைமைதாங்குவார். முன்னாள் அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் விசேட உரை நிகழ்த்துவார்.

## யாழ்ப்பாண....

[3ம் பக்கத் தொடர்ச்சி]

துவேஷ மனப்பாங்குகள், குறுகிய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட இத்தீர்க்கதரிசனமான வாக்கு 'மகாவலி' நதி இந்நாட்டவர் அனைவருக்கும் சொந்தம் என்று வாழ்ந்த ஒரு சந்ததியுனுடையதாக சிறப்புற்றது.

ஆனல் தற்போது......?

(முற்றும்)

## நிறுத்தப்பட்டது

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலை பற் சிகிச்சைப் பிரிவில் பல் பிடுங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது பல் விறைக்க போடப்படும் ஊசி மருந்து கையிருப்பில் இல்லாததே இதற்கு காரணமாகும்

பல் பிடுங்கல் தவிர்ந்த ஏனைய பற் சிகிச்சைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைத்தமி....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்குமிடையே சண்டை.

இந்த விடுதலைப் புலிகளின் இயக்கங்களைச் சார்ந்தவர்கள் தங்களுக்கு பணியாத அல்லது பிடிக்காத தமிழர்களையே கூட எப்படி நடாத்துகிறார்கள் என்ற கேள்வியும் அவ்வப்போது எழத்தான் செய்கிறது என்பதையும் முழுமையாக ஒதுக்கிவிடமுடியாது. ''ஈழம்'' என்ற தனித் தமிழ்நாடு ஒன்று இலங்கையில் உருவாகுமானல் அதனல் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன? என்ற கேள்வியும் முக்கியமானது

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தனிநாடு கோரிக்கையை விடுவதாக இல்லை. விடுதலைப்புலிகள் தங்களுடைய தாக்குதலை நிறுத்துவதாக இல்லை. அரசு தன்னுடைய அடக்குமுறையைக் கைவிடுவதாக இல்லை-என்ற நிலையில் இன்று இலங்கைப் பிச்னை நிற்கிறது'' என்றும் எழுதியுள்ளார். (கெ)

### "இனப்பிரச்னைக்கு நியாயமான

# தீர்வு சந்தேகமே!"

[யாழ்ப்பாணம்]

''நாட்டு மக்களை இன, மத ரீதியில் ஒருவரோடு ஒருவரை மோதவைப்பதன்மூலம் தனது அதிகாரத்தை நிலை நிறுத்திவரும் இன்றைய ஆட்சியிடம் இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வு ஒன்றை எதிர்பார்க்க முடியுமா? என்ற சந்தேகம் மக்களுக்கிடையே உருவாகியுள்ளது. அச் சந்தேகத்தை வலுவடையச்செய்யும் வழிகளிலே அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. சிங்கள மக்களின் பெரும்பான்மையோரைத் திசை திருப்புவதற்காக தமிழர் பிரச்னையை வேறுவிதமாகக் காட்டிவரும் யூ என். பி யின் உண்மையான தோற்றத்தை சிங்கள மக்களே புரிந்துகொள்ளக் கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது. இவ்வேளை தமிழ் மக்கள் தமது நிதானமான நிலைப்பாட்டின் மூலம் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டு மக்கள் விரோத யூ என். பி. யை ஆளும் அரங்கிலிருந்து அகற்ற முன்வரல் வேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] சங்கானை-நிச்சாமத்தில் நடத்திய மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய அக்கட்சியின் வடபிரதேசச் செயலாளர் திரு கே. செந்தில்வேல் குறிப்பிட்டார்.

மேற்படி மேதினக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே. ஏ சுப்பிரமணியம் தமது உரையில்:-

நாட்டுமக்கள் அனைவருக்கும் எதிராகத் தனது ஆட்சி எதிர்காலத்தைப் பாவித்துவரும் இன்றையஅரசு மேலதிகமாக தமிழ் மக்களுக்கு எதிரான அடிப்படை மனித உரிமைகளை மறுத்து அடக்குமுறைகளை விஸ்தரித்து வருகின்றது. அது தமிழ் மக்களை இந் நாட்டில் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்திவருவதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே தமிழ் மக்கள் சிங்கள மக்களோடு ஐக்கியப்பட்டு யூ என். பி.யை முறியடிப்பதற்கு முன்வரல்வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

## வைத்திலிங்கம் நினைவுப்பரிசு

[யாழ்ப்பாணம்]

யாழ் இலக்கிய வட்ட இலங்கை இலக்கியப் பேரவையின் செயற் திட்டத்திற்கு ஆதரவுபெருகி வருவதாக அதன் அமைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைத்திலிங்கம் மரக்காலை உரிமையாளர் திரு. வை ரவீந்திரன் காலஞ்சென்ற தமது தந்தையார் கார்த்திகேசு வைத்திலிங்கம் நினைவாக வருடந்தோறும் 1000 ரூபா பேரவையின் இலக்கியத் திட்டத்திற்குப் பரிசாக வழங்க முன்வந்துள்ளார்.

ஏற்கனவே இத் திட்டத்திற்கு பிரபல வர்த்தகர்களும் தொழிலதிபர்களும் டாக்டர் ஒருவரும் பரிசுகள் வழங்க முன்வந்திருப்பது தெரிந்ததே.

## பிரஜைகள்குழு பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சுருவில் வீதியில் அமைந்துள்ள பிரஜைகள் குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய தலைவரொருவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

## இனியவராய் விளங்கியவர்



நாயன்மார்கட்டு ப. சண்முகதாஸ் யாழ். மாநகர சபை மின்சாரப் பகுதியில் ஊழியராகப் பணியாற்றியவர். கடமையின்போது விபத்தில் சிக்கி அகால மரணமானர். இச் செய்திகேட்டு அனைத்து நெஞ்சங்களும் கலங்கின

சண்முகதாஸின் தன்னலமற்ற சேவை மனப்பான்மையானது குடும்பம் என்ற வட்டத்துள் அடங்கிவிடவில்லை. அயலவர், ஊரார், நண்பர் ஆகிய அனைவர்க்கும் உதவி புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தை ஸ்தாபிப்பதில் அரும்பாடுபட்ட முன்னோடிகளில் இவரும் ஒருவராவார். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் அரங்கேற்றிய 'குங்குலியக் கலயநாயனர்' நாடகத்தில் நடித்து அனைவரதும் பாராட்டைப் பெற்றவர். இவர் தமது 26வது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுக!

—ஓர் அன்பர்


# அறிவித்தல்

MACKINNON MACKENZIE & COMPANY of CEYLON LTD.

மக்கிநொன் மக்கென்ஜி அன்ட் கம்பனி ஒவ் சிலோன் லிமிறெட்

யாழ்ப்பாணம் கிளை அலுவலகம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி.
1-ம் ஒழுங்கை இல. 8ல் இயங்கிக்கொண்டிருந்த
மேற்படி கிளை அலுவலகம்

**31 - 3 - 1985** தொடக்கம்

மூடப்பட்டுள்ளது.

இந்தக்கிளையால் கையாளப்பட்ட
விமான டிக்கட்ஸ் (Air Tickets)
மற்றும் பிரயாண
காசோலைகள் (Travellers Cheques)

தொடர்ந்து கொழும்பு அலுவலகத்தால்
கவனிககப்படும்.

Mackinnons Travels Ltd.
4, LEYDEN BASTIAN ROAD,
FORT, COLOMBO-1.

(தொலைபேசி இல: 29881 — 20456 — 25489 — 29563)

எமது கிளை அலுவலகமோ அல்லது ஏஜெண்டுகளோ
யாழ்ப்பாணத்தில் இல்லாததால்
அங்கு எவருடனும் செய்துகொள்ளும்
விசயங்களுக்கு எவ்விதத்திலும்
நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை
பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம்

நிர்வாக இயக்குநர்,

மக்கிநொன் மக்கென்ஜி அன்ட் கம்பனி ஒவ் சிலோன் லிமிறெட்

மக்கிநொன் றவெல்ஸ் லிமிறெட்,

(3117)

## அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு நாவலடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமிதினத்தை முன்னிட்டு இன்றுபகல் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகளுடன், கஞ்சி வார்வையும் நடைபெற்று இரவு அம்மனுக்கு விஷேடபூசையும் நடைபெறவுள்ளது.


**மொடேர்ண் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
30-4-85 முதல்
ALICE GOOD BODY
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
10-30, 2-15, 4-15

**ஸ்ரான்லி மினி (சினிமா)**
10-30, 2-30,
M. G. R. -K. R. விஜயா
நம்பியார்-அசோகன்
"தாழம்பூ"
5'X5' திரையில்

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி. ப. 2-00
பாண்டியன்-இளவரசி
P. S. வீரப்பாவின்
மண்ணுக்கு ஏற்ற
பொண்ணு
4-30 P M. மட்டும்
BRUCELEE
in
BIG BOSS

**றீகல்**
தினசரி 10-30, 2-00
பாண்டியன் ரேவதி
நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்
றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

**ஆனந்தி வீடியோ சினிமா**
உல்லாசப்பயணம் வந்த ஓர் இளம் பெண்ணை ஐந்து வாலிபர்கள் கற்பழிக்கின்றார்கள். அவர்களை ஒவ்வொருவராக பழிவாங்கும் ஓர் உணர்ச்சிகாவியம்
1 SPITON ON YOUR GRAVE
(கலர்)

**லிடோ சினிமா**
"You dont Assign, You Unleash Him"
Staring
Kenwahl-Alberta Watson
in
"THE SOLDIER"

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2.30
ஜோதி, கே. ஆர்.விஜயா, பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)


## பத்தமேனியில்
# கடத்தியவரை விடுவிக்க கோவிலில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

கடத்திச் சென்ற அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த பொன்னுத்துரை தியாகராசா என்பவரை நிபந்தனை இன்றி விடுதலைசெய்யவேண்டுமென்று கோரி, பத்தைமேனி பிள்ளையார் கோவில் முன்றலில் அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இதுசம்பந்தமான துண்டுப் பிரசுரம் ஒன்றும் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டுள்ளது.

பத்தைமேனி அச்சுவேலியைச் சேர்ந்த முன்னாள் எஸ்டேட் சுப்பிறின்டனும் சிறந்த சமூக சேவையாளருமாகிய திரு பொ. தியாகராசா கடந்த ஞாயிற்றுக்கிழமை (28-4-85) இரவு ஆயுத முனையில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

திரு தியாகராசா இதுவரை விடுவிக்கப்படாமையால் இவ்வூர் மக்களாகிய நாங்கள் வேதனையும் மனக்கிலேசமும் அடைந்துள்ளோம். திரு.தியாகராசா கடத்திச் செல்லக் கூடிய தீயசெயல் எதனையும் செய்தத க நாம் நம்பவில்லை. இவர் அரிமா சங்க அங்கத்தவராக இருந்து பல சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார்.

இவரைக் கடத்தியவர்கள் இவருக்கு எதுவித தீங்கும் விளைவிக்ககாது நிபந்தனையின்றி மனிதாபிமான அடிப்படையில் உடன் விடுவித்து எமது மன உழைச்சலையும் கவலையையும் தீர்க்க உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் வேண்டுகின்றோம்


**ஹரன் சினிமா**
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00
4-15
Clint Eastwood
in
ESCAPE FROM
ALCATRAZ
மிகப் பிரபல்யம் வாய்ந்த சிறைச்சாலையிலிருந்து தப்பியோடுவதற்குப் போடும் பிரமாண்டமான திட்டத்தைச் சித்தரிக்கும் ஓவியம்

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி: 10-30, 2-30
பாண்டியன் - இளவரசி
நளினி- கவுண்டர்மணி
நடித்த
மண்ணுக்கு ஏற்ற
பொண்ணு
புதிய வெளியீடு


## இன்று சித்திரைக் கஞ்சி

நவாலியம்பதியின் சகல ஆன்மாக்களும் உய்யும்பொருட்டு தேற்றுமர நிழலில் வீற்றிருந்து அருள்பொழியும் ஸ்ரீஞானவைரவப் பெருமானின் சன்னிதியில் சித்திரா பூரணையில் சித்திரைக்கஞ்சி பெற்று வருகின்ற பெருமையை நவாலியம்பதி அன்பர்கள் அறியாதவர்களல்லர் பௌர்ணமி தினமான இன்றும் வழமைபோல் சித்திரைக் கஞ்சி இடம்பெறும்.

நவாலி வடக்கில் தமிழ்ப் பெருங்குடி மரபிலே தோன்றிய வணக்கத்திற்குரிய மறைஞானி திரு. இராமநாதன் கதிர்காமர் அவர்கள் முதன் முதலாக நவாலியில் சித்திரைக்கஞ்சி மடம் ஒன்றைக் கட்டி நிலைபெற வைத்தார் ஏறத்தாழ நூற்றியைம்பது வருடங்களைத் தாண்டிவிட்ட சித்திரைக்கஞ்சி மடம் அழிவுற்றபடியால் புதியகட்டிடம் கட்டும் முயற்சி பலகாலமாக ஆலோசிக்கப்பட்டு ஈற்றில் கைவிடப்பட்டது.

பின்னர் இத் திருப்பணி நவாலி வடக்கு தேற்றுமரத்தடி ஸ்ரீஞானவைரவர் கோவிலில் நடைபெற்று வருகின்றது. இப்பணி தொடர்ந்து சிறப்புடன் வளர்ச்சியுற்றுப் பொலிகின்றது

சித்திராபூரணையில் நவாலி வடக்கு விழாக்கோலம் பூண்டு நிற்பதைக் காணுந்தோறும் மெய்சிலிர்க்கும். உள்ளம் பக்திபரவசமடையும். முன்னோர்கள் இறையன்பில் எவ்வாறு திளைத்தார்கள் என்பதைக் காட்ட இச்சித்திரைக் கஞ்சியே தக்க சான்றாகும்.

சி. இராஜேஸ்வரன்

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### அமரர் திருமதி அழகம்மா சண்முகம்

(இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 01-10-1919 மறைவு: 05-04-1985



குடும்ப ஒளி விளக்காய், அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய், தியாகத்தின் திலகமாய், சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற எம்தாயே மின்னாமல் இடி இடித்தவாறு சிவப்பேறடைந்து எம்மையெல்லாம் அதிர்ச்சியடையச் செய்து, ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொண்ட எங்கள் தெய்வமே உங்கள் ஆன்ம [illegible].

அன்னார் சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் உற்றதுணையாய் நின்று உதவிகள் பல புரிந்து அந்திமக் கிரியைகளைச் சிறப்புடன் நடாத்த உதவிய அனைவர்க்கும் எங்கள் மனங் கனிந்த நன்றி உரித்தாகுக

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'அளகாபுரி',
சண்டிலிப்பாய். 3080

## அந்தியேட்டி அழைப்பு




எமது ஏகபுத்திரன் முருகமூர்த்தியின் அந்தியேட்டிக்கிரியைகள் 6-5-85 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழவிருப்பதால், அத்தருணம் எமது உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர் அனைவரும் சமூகந்தந்து மதியபோசன உபசாரத்திலும் பங்கு பற்றி எமக்கு மன ஆறுதல் தருமாறு மிகப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
க. குணரத்தினமும் (குஞ்சர்)
குடும்பத்தினரும்.

மில் ஒழுங்கை, மல்லாகம். (3129)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி
### திரு. பொ. ஜெயராசா



மலர்வு:
31-3-40

○

மறைவு:
4-5-83

ஒளி விளக்கான எங்கள அன்பு [illegible] அருமைக் கணவரே. நினை[illegible] பிரகாரம் எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டு கண்ணீரில்கலந்து விட்டது பாசம் நிறைந்த அன்புத் தந்தையாக திகழ்ந்த தெய்வமே உங்களின் மறக்க முடியா அன்பு நினைவுகளும் பிரிவுத் துயரும் என்றென்றும் எம்மைவிட்டு அகலாது. உங்களின் தூய ஆத்மா எங்களை வழிநடத்திச் செல்ல வேண்டுகின்றோம்.

யோண்ராசா வீதி,
அச்சுவேலி.
3112

உங்கள் நினைவால்
துயருறும்
மனைவி, பிள்ளைகள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி
### திருமதி மாணிக்கம் பசுபதி



தோற்றம்: 03-04-1932 மறைவு: 13-05-1984
திதி: 04-05-1985

எமது குடும்ப ஒளிவிளக்காய் ஒளிவீசி எம்மோடு வாழ்ந்ததை ஒரு பொய்க்கனவாககிவிட்டு திடீரென எம்மைத் துயரக்கடலில் மிதக்கவிட்டு விண்ணுலகு சென்றுவிட்டீர்கள். பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எமது மனதைவிட்டகலாது.

உங்கள் மறைவால் ஆறாத்துயருறும்

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். 3126

## மனிதஉரிமை ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் அடங்கிய இக் கமிட்டி, முதலில் இலங்கையில் மனித அடிப்படை உரிமைகள் மீறப்பட்டது குறித்து விரிவாக ஆராயும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## பூஸாவிலிருந்து...

(யாழ்ப்பாணம்)

காலி பூஸா முகாமிலிருந்து

# பேராதனை மாணவர்களுக்கு 6ந் திகதி பஸ் பயண ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலிருந்து கண்டி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அங்கு செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 6-ம் திகதி திங்கட்கிழமை மூன்று பஸ் வண்டிகள் காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பேராதனை புறப்படும்.

ஏற்கனவே பெயர்களைக் கொடுத்திருப்பவர்கள்மட்டுமே இப்பயணத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

6-ம் திகதி திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து இப்பஸ் வண்டிகள் புறப்படும். தொடர்ந்து சாவகச்சேரி மாணவர்களுக்கென சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் முன்பாக இவை நிறுத்தப்படும்.

இரண்டாவது தரிப்பு கொடிகாமம் புகையிரதநிலையம் முன்பாகவும், மூன்றாவது தரிப்பு பரந்தன் தபால் கந்தோர் அருகிலும், இறுதித் தரிப்பு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை முன்பாகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்கள் சிலர் இப்பயணத்துக்குப் பொறுப்பாகச் செல்வார்கள். இப்பஸ் வண்டிகளில் செல்லவுள்ள மாணவர்கள் அனைவரும் அடையாள அட்டைகளைத் தவறாது எடுத்து வரும்படியும் வலியுறுத்தப்பட்டுள்ளனர். (கி)

ஏழாம் திகதி மேலும் ஒரு தொகுதி இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.


யாழ்நகரில்

## மங்களகரமான திறப்புவிழா

## Mack Travels Ltd.

No: 8, FIRST LANE, POINT PEDRO ROAD, JAFFNA

**05–05–1985 ஞாயிற்றுக்கிழமை**

முற்பகல் 10-00 மணிக்கு

பரி. யோவான் கல்லூரி அதிபர்

**திரு C. E. Anandarajan**

B.Sc (Madras) Dip-in Ed. (Ceylon), Cert-Ed-St (Oxford)

அவர்களால் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

இது

## Quicks Enterprises Travels and Tours,

AUCTIONEERS AND BROKERS

**533, Stanley Road, Athiyady, Jaffna வின்**

ஓர் கிளை ஸ்தாபனமாகும்.

இதுவரை காலமும் யாழ். நகரில் இயங்கிவந்த MACKINNONS TRAVELS LTD. ஸ்தாபனத்தார் தம் சேவையை நிறுத்தியபடியால் யாழ் மக்களின் நன்மை கருதி எமது சேவை இவர்களின் ஸ்தாபனத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது இவர்கள் செய்த சேவையை நாம் உங்களுக்குத் தொடர்ந்து செய்வோம்.

மிகக்குறைந்த கட்டணத்தில் கூடிய விரைவில் யாழ்ப்பாணத்திலிருந்து சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்.

1. பேர்லின் (BERLIN), LONDON, பிரான்ஸ், ஹொலன்ட், கனடா, சுவிஸ் முதலிய இடங்களுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.
2. BANGKOK, சிங்கப்பூர், மாலைதீவு, கோலாலம்பூர், COPENHAGEN ஊடாக BERLIN செல்ல வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
3. யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல ஒழுங்குகளையும் செய்துகொடுப்பார்.
4. கொழும்பில் தங்குமிடவசதி, உணவு, கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா செல்லும் ஒழுங்குகள், கொண்டுசெல்லவேண்டிய காசோலைகள் (TRAVELLERS CHEQUES) யாவும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.
5. மேலும் இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டு (BONDING), கடவுச்சீட்டு புதுப்பித்தல், மாற்றுதல் யாவும் செய்ய ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

## Mackinnons Travels Ltd.,

ஸ்தாபனத்தில் கடமைபுரிந்த திரு. M. Nadarajah அவர்கள் இந்த ஸ்தாபனத்தில் தொடர்ந்து சேவைபுரிவார். இந்த ஸ்தாபனத்தில்

Mr. A. Kanagaratnam } Retired Station Masters,
Mr. P. T. Samuel } Sri Lanka Railway
Mr. E. T. Chellaiah-Retired Staff Assistant, Sri Lanka Railway
Miss S. R. Chellaiah } Accounts and
Miss N. Namasivayam } Typist Clerks

ஆகியோரும் பணிபுரிவர்.

மேலும் வேண்டிய விபரங்களுக்குக் கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

Mrs. Savithridevi Balasingham,
MACK TRAVELS LTD. AUCTIONEERS AND BROKERS
No. 8, First Lane, Point Pedro Road,
Jaffna. Telephone: No 24791.

எமது கிளை ஸ்தாபனங்கள்:-

1. Quicks Enterprises, Travels and Tours, 533, Stanley Road, Jaffna.
2. Quicks Travels and Tours, Saraswathy Gardens, Church Rd., Chavakachcheri. Tele. No, 273
3. Quicks Enterprises, Adiyapatha Veethy, Kalviyankadu, Nallur, Jaffna.
4. Mr. Joseph Nayagam, Seven Temple Farm, Paranthan Junction, Paranthan.


## பஸ்ஸிலிருந்து...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுப்பிற்பகல் 787 இலக்க பாதையில் பஸ்கள் பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த போதுமாதகல் சந்திக்கு அருகிலும், சித்தங்கேணிசந்திக்குஅருகலும் மோட்டார்சைக்கிள் நபர்களினால் நிறுத்தப்பட்டு இரண்டு பஸ்களிலும் மூன்று 'பாட்டரி'கள் அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக மேற்படி பாதையில் பஸ்சேவை இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு வ.பி.போ.சபை பொறுப்பேற்காது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

## யாழ்.–திருமலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் மற்றுமொரு சேவை நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு வழமையாக நடைபெறும் 6-30, 8-00 காலை பஸ் சேவையுடன் இன்று முதல் 10-00 மணிக்கு மூன்றாவது சேவை நடைபெறும்.

### ஆழியவளைப் பஸ் சேவை

இதேநேரத்தில் இன்றுமுதல் ஆழியவளைக்கு காலை 7-25க்கும் பகல் 1-00 மணிக்கும் மீண்டும் பஸ் சேவை நடைபெறும்.

## வர்த்தகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் ரூபா கொடுத்தால், 2 மணிக்குவிடுவிக்கப்படுவார்'' என்று அனாமதேய தொலைபேசி அழைப்பொன்று விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட வர்த்தகரின் வீட்டிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

சுண்டுக்குளியைச் சேர்ந்த வர்த்தகர் பொன்னம்பலம் (46 வயது) என்பவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத கோஷ்டியினரால் நேற்று முன்தினம் காலை அழைத்துச் செல்லப்பட்டார்.

## அரசுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறதென்று பாராளுமன்றத்திலேயே அவர் கேட்டிருக்கிறார். அரசுக்கு எதிராகத் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை நடத்தியிருக்கின்றார். பயங்கரவாதம் இருக்கும்வரை அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்று ஜனாதிபதி கூறியிருக்கும்போது அதற்கு மாறாகப் பயங்கரவாதம் இருக்கும் போதே அரசியல்தீர்வு காணும்படி வற்புறுத்துகிறார் இந்தக் காரணங்களின் அடிப்படையில் அமைச்சர் திரு எஸ். தொண்டமானுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று மேற்படி பௌத்த சபை கோரியுள்ளது.

## இலங்கைத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வைஇலங்கைஅரசுவிரைந்து ஏற்படுத்தவேண்டும், இல்லையேல் அப்பிரச்னை மேலும் கடினமடையும்.

'இலங்கையில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளை தமிழ் மக்களும் அனுபவிக்க சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

''இலங்கைத் தமிழர்கள்மீது நடத்தப்படும் கொடூரமான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

''இலங்கைத் தமிழ்பகுதிகளில் இராணுவப் படைகளைக் குவித்துவருவதை நிறுத்தி, அவற்றை வாபஸ்பெறுவதுடன் பொலிஸ் படைகளை அவற்றுக்குப் பதிலாக அப்பகுதிகளில் சேவையிலீடுபடுத்தவும்.

''இலங்கைத் தமிழர் விவகாரம் தமிழ்நாட்டு மாநிலத்துக்கு மட்டுமுரியதல்ல. அது இந்தியாவின் ஒரு தேசியப் பிரச்னை.'' (கி)

## பஸ்மீது...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

படுகாயமடைந்து, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து சகல போக்குவரத்துச் சேவைகளும் நேற்றுத் தடைபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [மா]

## பாடசாலைகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பருவகாலச் சீட்டுக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் வளர்ந்தோர் பருவகாலச் சீட்டுக்களும்' யாழ் பல்கலைக்கழக தொழில் நுட்பக் கல்லூரி அடங்கலான சகல நிறுவனங்களில் உள்ளவர்கள் தத்தமது நிறுவனங்கள் ஊடாகப் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், எக்காரணம்கொண்டும் யாழ் மத்திய பஸ்நிலையத்தில் அல்லது யாழ் சாலையில் மாணவர்களுக்குப் பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்


## தம்பு சிவசங்கரநாதன்

தோற்றம்:- 13-3-1933 — மறைவு:- 3-5-85

சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் யாழ் மாவட்ட நீதிமன்ற லிகிதருமாகிய தம்பு சிவசங்கரநாதன் காலமாகி விட்டார் இவர் காலஞ்சென்றவர்களான தம்பு, பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், தெய்வநாயகியின் அன்புக்கணவரும், ஸ்ரீஐங்கரன், ஸ்ரீநாதன், ஸ்ரீ சங்கர், ஸ்ரீ குமரநாதன், ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலசுப்பிரமணியம் [இளைப்பாறிய வங்கி அதிபர்] சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை(4-5-85)10 மணிக்கு அன்னாரின் இல்லமாகிய பொன்னகம் சுன்னாகத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

3134

# மரண அறிவித்தல்



தோற்றம்: 10-11-1920 மறைவு: 3-05-1985

## பாலன் கிருஷ்ணபிள்ளை

(வைத்தியர் மரக்காலை அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த பாலன் - கதிராசி தம்பதிகளின் அன்பு மகனும், கனகரத்தினத்தின் அன்புக் கணவருமாகிய கிருஷ்ணபிள்ளை அவர்கள் 3-5-85 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் சண் ஜெயச்சந்திர போஸ் (செயலாளர் வலி கிழ.(வ.ப)ப.நோ.கூ. சங்கம் அச்சுவேலி), வேலும்மயிலும், இரத்தினசிங்கம் ஆகியோரின் மாமனாரும், அமரர் சுப்பர் ஆசையர் (சித்தஆயுள் வேத வைத்தியர்) அவர்களின் மருமகனும், அமரர் கந்தசாமி அருமைநாயகம், நாகமணி, சுந்தரம், வீரசிங்கம், தெய்வானை ஆகியோரின் சகோதரரும், நடராசா புவனேஸ்வரி, பாலசிங்கம் (கயானா), திலகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தவராணி, சந்திராணி, பிரேமராணி, கமலராணி, தபோஷன், கிரிஜா, விஜேஜன், வதனேஜன், ஜெனேஜன், அனுஜா ஆகியோரின் பெரிய தகப்பனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-5-85 பி ப. 3-30 மணியளவில் அச்சுவேலி வல்லைமயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர், அச்சுவேலி வடக்கு. 3-5-85

[3132]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P. O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24124